பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண்: 673 **நாள்: 12.11.2026**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள அனைத்து மின் விளக்குகளும் 100 சதவீதம் ஒளிர்வதை உறுதி செய்திட வருகின்ற 14.11.2026 அன்று கள ஆய்வு செய்திட மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ். சமீரன்,இ.ஆ.ப., அவர்கள் அலுவலர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சியில், 3.11 இலட்சம் மின் விளக்குகள் அமைக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவை 100 சதவீதம் ஒளிர்வதை உறுதி செய்திடும் வகையில் ஒவ்வொரு மாதமும் 15ஆம் தேதிக்குள் கள ஆய்வு மேற்கொண்டு, அதனடிப்படையில் எரியாத மின் விளக்குகள் மற்றும் பழுதுகள் உடனடியாக சரி செய்திடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

இதன் தொடர்ச்சியாக, மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள மின் விளக்குகள் அனைத்தும் 100 சதவீதம் ஒளிர்கிறதா என்பதை 14.11.2026 அன்று கள ஆய்வு மேற்கொண்டு, அறிக்கை அளித்திடவும், எரியாத மின் விளக்குகள் மற்றும் பழுதுகளை 48 மணி நேரத்திற்குள் சரி செய்திடவும் உத்தரவிட்டுள்ளார்கள்.

பொதுமக்களும், பெருநகர சென்னை சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள எரியாத தெருவிளக்குகள் மற்றும் இதர பழுதுகள் தொடர்பாக 1913 என்கிற தொலைபேசியிலும், நம்ம சென்னை App மூலமும் தகவல் அளிக்கலாம் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,

பெருநகர சென்னை மாநகராட்சி.